**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No : CC No.20/2024**
**Prosecution Witness : PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆப்ரகாம் பவுல் | | : |
| Father / Husband Name | : கலையரசன் | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( Accused present. )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **10/05/2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது எண்.5/328, வ.உ.சி. தெரு, அன்னை இந்திரா நினைவு நகர், பம்மது குளம் என்ற முகவரியில் குடியிருந்து, வெல்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 20.06.2023 அன்று இரவு சுமார் 10.45 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது, எனக்கு தகவல் வந்தது. என் அப்பா கலையரசன் பழைய இரும்பு பொருட்களை வாங்கி விற்கும் வியாபாரம் செய்து வருகிறார். அன்றைய தேதியில் வேலை முடித்துவிட்டு அவரது TN 18 AR 8487 என்ற ஸ்பிளண்டர் வாகனத்தில் திருவள்ளூரில் இருந்து செங்குன்றம் வழியாக பாலி எலக்ட்ரோ கம்பெனி எதிரே வந்து கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் வந்த வந்த கண்டெய்னர் லாரி என் தந்தை மீது ஏறி இறங்கியதாக தகவல் வந்தது.

மேற்படி கண்டெய்னர் லாரி எனது தந்தை மீது மோதிவிட்டு வேகமாக சென்றுவிட்டது. நானும், எனது அம்மாவும் தகவல் தெரிந்து அங்கு சென்று பார்த்தபோது, எனது தந்தை இறந்திருந்தார். அதன் பின்னர் காவல் துறைக்கு போன் செய்து தகவல் கொடுத்தோம். அவர்கள் வந்து என்னை விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ( **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ) வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில் )**

நான் தினசரி காலை 9 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு மாலை 7 மணிக்கு வீட்டிற்கு வருவேன். சம்பவம் நடந்த இடத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே சுமார் 1 1/2 கி.மீ. தூரம் இருக்கும். எனக்கு சுமார் 10.45 மணியிலிருந்து 11.00 மணிக்குள் எனது தந்தைக்கு விபத்து நடந்ததாக தகவல் வந்தது. எனக்கு தகவல் சொன்ன நபரை எனக்கு தெரியாது. நான்

சம்பவயிடத்திற்கு சுமார் 11 மணிக்கு சென்றேன். புகாரை சம்பவயிடத்தில் அருகில் இருந்த நபர் எழுதி கொடுத்தார். எனக்கு என் தந்தை இறந்தது குறித்து ஒருவர் என் வீட்டிற்கு வந்து தகவல் சொன்னார். நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது, அங்கு போலீசார் இல்லை. போலீசார் நான் தகவல் சொன்ன பின்னர்தான் வந்து என்னை விசாரித்தார்கள்.

புகாரை நான் சம்பவயிடத்தில்தான் போலீசாரிடம் கொடுத்தேன். என்னை போலீசார் சம்பவயிடத்தில் வைத்துதான் விசாரித்தார்கள். நான் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. லாரி வேகமாக சென்றதா, என் தந்தை வேகமாக சென்றாரா என்று எனக்கு நேரடியாக தெரியாது. ஆனால் அருகில் இருந்தவர்கள் லாரி வேகமாக சென்றதாக கூறினார்கள். நான் தாமதமாக சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No : CC No.20/2024**
**Prosecution Witness : PW 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : சக்திவேல் | | : |
| Father / Husband Name | : தனபால் | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( Accused present. )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **10/05/2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது எண்.1/1736, முதல் குறுக்கு தெரு, முத்தமிழ் தெரு, காந்தி நகர் என்ற முகவரியில் குடியிருந்து, சர்வீஸ் இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன். கடந்த 20.06.2023 அன்று இரவு சுமார் 10.45 மணியளவில் நான் எனது சொந்த வேலையாக சென்றுவிட்டு வீரபாண்டியன் நகரில் இருந்து காந்தி நகருக்கு வந்து கொண்டிருந்தபோது, விவோ பாலி கம்பெனி அருகே எங்கள் முன்னர் காந்தி நகரை நோக்கி சென்று கொண்டிருந்த லாரி, அதன் முன்னால் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. மேற்படி லாரி மோதியதில் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற நபர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். லாரி விபத்து ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்றது.

இறந்த நபர் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் கருப்பு நிறமாகும். கண்டெய்னர் லாரி மஞ்சள் நிறமாகும். லாரியின் பதிவெண் TN 20 AU 0198 ஆகும். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு கழுத்து, தலை பகுதியில் லாரி ஏறி இறங்கியது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். லாரியை பார்த்தால், என்னால் அடையாளம் காட்ட முடியும். லாரியை ஓட்டி சென்ற டிரைவரை நான் பார்க்கவில்லை.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில் )**

விபத்து நடந்த சமயம் நான் திருவள்ளூரில் இருந்து காந்தி நகர் நோக்கி சென்று கொண்டிருந்தேன். சம்பவயிடத்திற்கும், எனது வீட்டிற்கும் இடையே சுமார் 1 1/2 கி.மீ. தூரம் இருக்கும். விபத்தில் இறந்த நபர் பழைய இரும்பு வியாபாரம் செய்ததால், அவரை நான்

பார்த்திருக்கிறேன். அவரை சுமார் 10 ஆண்டுகளாக பார்த்துக் கொண்டிருந்திருக்கிறேன். அவர் எனது உறவினர் அல்ல. நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது, அங்கு எத்தனை பேர் நின்று கொண்டிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த பகுதியில் இருந்தவர்கள், அந்தயிடத்தில் கூடியிருந்தார்கள். எனக்கும் முன்னால் சென்ற லாரிக்கும் எவ்வளவு தூரம் என்றால் மேற்படி தூரம் சுமார் 15 அடி தூரம் இருக்கும்.

நான் லாரி ஓட்டிய டிரைவரை பார்க்கவில்லை. விபத்து லாரியின் கவனக்குறைவால் ஏற்பட்டதா அல்லது இருசக்கர வாகனத்தின் கவனகுறைவால் ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது. விபத்தில் இறந்த நபர் எனக்கு நன்றாக தெரியும் என்பதால் நான் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை சம்பவயிடத்திலும், காவல் நிலையத்திலும் வைத்து விசாரித்தார்கள். வழக்கு சம்பவம் நான் சென்று பார்ப்பதற்கு முன்னால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றாலும், எனக்கு தெரிந்த நபர் என்பதால், அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

| | | |
|---|---|---|
| **Case No** | : | **CC No.20/2024** |
| **Prosecution Witness** | : | **PW 3** |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : சாம் இம்மானுவேல் | | : | |
| Father / Husband Name | : சக்திவேல் | | : | |
| Village | : | Religion | : | |
| Taluk | : | Age | : | |

( Accused present. )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **10/05/2024**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது எண்.1/1736, முதல் குறுக்கு தெரு, முத்தமிழ் தெரு, காந்தி நகர் என்ற முகவரியில் குடியிருந்து, நான் B.Com படிப்பு படித்துவிட்டு வீட்டில் இருந்து வருகிறேன். கடந்த 20.06.2023 அன்று இரவு சுமார் 10.45 மணியளவில் நானும், எனது அப்பாவும் இருசக்கர வாகனத்தில் திருவள்ளூரில் இருந்து செங்குன்றம் நோக்கி சென்று கொண்டிருந்தபோது, விவோ பாலி கம்பெனி அருகே எங்கள் முன்னர் காந்தி நகரை நோக்கி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்த லாரி, அதன் முன்னால் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. மேற்படி லாரி மோதியதில் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற நபர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். லாரி விபத்து ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்றது.

மேற்படி இறந்த நபர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. லாரியின் பதிவெண் TN 20 AU 0198 ஆகும். லாரியை ஓட்டி சென்ற டிரைவரை நான் பார்க்கவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். லாரியை பார்த்தால், என்னால் அடையாளம் காட்ட முடியும்.

<u>**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில் )**</u>

நானும், எனது அப்பாவும் திருவள்ளூரில் இருந்து செங்குன்றம் நோக்கி வந்து கொண்டிருந்தோம். நாங்கள் வந்த இருசக்கர வாகனத்தை எனது தந்தைதான் ஓட்டி வந்தார். விபத்தில் இறந்த நபர் எங்களுக்கு முன் சென்ற லாரிக்கு முன்னால் சென்று கொண்டிருந்தார்.

லாரிக்கும் நாங்கள் சென்ற வாகனத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் 10 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்தபோது, அங்கு 5, 6 பேர் இருந்தார்கள். நான் லாரி ஓட்டிய டிரைவரை நான் பார்க்கவில்லை. எங்களுக்கு முன்னால் லாரி சென்று கொண்டிருந்ததால், இருசக்கர வாகனம் அதிவேகமாக சென்றதா என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி இருசக்கர வாகனத்தில் சென்ற நபர் கவனகுறைவாக ஓட்டினாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவயிடத்தில் சம்பம்வ நடந்தபோது போலீசார் இல்லை. அதன் பின்னர்தான் போலீசார் வந்தார்கள். சம்பவயிடத்தில் வைத்துதான் போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள். இறந்த நபரை நான் சம்பவத்திற்கு முன்னால் பார்த்திருக்கிறேன். அவர் அந்த பகுதியை சார்ந்தவர். அவர் எனக்கு தெரிந்த நபர் என்பதால், நான் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.